## தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை – 2016

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, ஒன்றிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் தர மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 56(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையாக கொண்டு இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவித்தல் எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்களின் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்திலான கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுமா என்பதை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்திக்கமைய ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்காக சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கணக்குகளின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்படும் ரூபா 48,765,742 கிரயப் பெறுமதியுடைய 23 மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், கணக்குகள் நியமத்திற்கமைய அடிக்கடி கொண்டு செல்லும் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி / நியாயப் பெறுமதி மாற்றமடையாத ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மொத்த சொத்துக்களின் தொகுதியும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 3,136,974,578 கிரயமான காணிகள், கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் நியாயப் பெறுமதியினை காண்பிப்பதற்காக மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் கணக்கு வைப்பதற்காக "டெலி" எனும் கணக்கீட்டு மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்கள் கைமுறையாக (manual) தயாரிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்த கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பரீட்சை மீதியினுள் ரூபா 539,276,533 தொகையான செலவு மீதியொன்று இலாப / நட்டக் கணக்காக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த மீதி கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கட்டமைப்பிலிருந்து உருவாகிய 2016 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான திரண்ட இலாபம் என்பது அவதானிக்கப்பட்டது. எனினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியிலேயே திரண்ட நட்டம் ரூபா 658,416,397 ஆகும். இந்த கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கட்டமைப்பு 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததெனினும், வருடாந்தம் தேவையான பேரேட்டுக் குறிப்புகளினூடாக திரண்ட இலாபம் / நட்டக் கணக்கு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் கணக்கு தொகுதிகள் (Group) தவறுதலாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டமையால் இந்த மீதிகளிடையே ரூபா 1,197,692,930 ஆன தொகையான வேறுபாடொன்று இடம்பெற்றிருந்ததாக கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், மேற்படி மாற்றங்களை திருத்துவதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய விரிவான பேரேட்டுக் குறிப்புக்கள் மற்றும் உரிய இணக்கக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ii) பேரேட்டிற்கமைய குழாம் மற்றும் பகுதி நேர பாடநெறி இலாப / நட்டக் கணக்கின் செலவு மீதி ரூபா 48,342,934 ஆக இருந்ததுடன், உரிமை மூலதனத்திலான கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 54,812,789 ஆனமையால் ரூபா 6,469,855 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(iii) பேரேட்டிற்கமைய ஆரம்ப இருப்பு மீதி ரூபா 10,528,029 ஆக காணப்பட்டதுடன், நிதிக்கூற்றுக்களுக்கமைய அந்த மீதி ரூபா 9,221,117 ஆனமையால் ரூபா 1,306,912 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படாத பின்வரும் ரூபா 1,425,589,071 தொகையான வரவு மீதி மற்றும் ரூபா 760,826,645 தொகையான செலவு மீதி பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | வரவு<br>ரூபா | செலவு<br>ரூபா |
|---|---|---|
| பகுதி நேர பாடநெறி விரிவுரைக் கட்டணம் | 92,000 | |
| பகுதி நேர பாடநெறி வருமானம் | | 3,162,000 |
| அச்சீட்டுப் பிரிவின் மற்றும் பகுதிநேர பாடநெறி விரிவுரைக் கட்டணம் | 989,600 | |
| அரச நிதியத்தினை மாற்றும் கணக்கு | 1,120,312,313 | |
| இலாப நட்டக் கணக்கு | | 539,276,533 |
| திறன்கள் துறை அபிவிருத்தி நிதியம் | | 218,388,112 |
| ஒதுக்கீடு மற்றும் மிகைகள் (திரண்ட வருமானம்) | 304,195,158 | |
| மொத்தம் | 1,425,589,071 | 760,826,645 |

(v) பின்வரும் மீதிகள் பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | மீதி |
|---|---|
| | ரூபா |
| புது மெதுர நிதியம் | 719,866 |
| இளைஞர் விவகார அமைச்சு (MYASD Grant) | 63,800,000 |

மேற்படி மீதிகளுக்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பில் சரியான சான்றுகளை முன்வைப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக அந்த மீதியினுள் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படும் பாதிப்புகளும் இல்லாதருந்ததாக உறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) நிறுத்தி வைத்த உழைப்பிற்கு சீராக்கப்பட வேண்டிய கடந்த வருடத்திற்கான ரூபா 28,721,375 தொகையான பணிக்கொடை மிகை ஒதுக்கீடு மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட்டமையால் ஆண்டிற்காண மிகை அந்த அளவினால் மிகைக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 6,368,353 தொகையான அட்டுறு செலவினம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றினுள் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 657,173,475 தொகையான திரண்ட நிதியத்தின் மீதியினுள் ரூபா 1,123,161 தொகையான வரவு தொங்கல் மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) 06 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 139,565 தொகையான நேரடி வரவு வைத்தல்கள் மற்றும் 05 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 3,735,397 தொகையான நேரடி பற்றுகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட 02 ஒப்பந்தங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,151,623 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் முற்பணங்களாக கணக்கு வைக்கப்படாது நடைமுறை வேலை கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(எ) நடைமுறை வேலைக் கணக்கின் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 7,033,216 தொகை தலைமை அலுவலகத்தின் வளாகத்தின் ஒரு பகுதியினை நவீன மயப்படுத்தும் ஒப்பந்தத்திற்குரியதாவதுடன், அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 2014 நவம்பர் 12 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ரூபா 8,458,390 தொகையான செய்வேலை பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. செலுத்த வேண்டிய எஞ்சிய பணமான ரூபா 1,649,913 இற்காக கடன்பட்டோர் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், அந்த மேலதிக பணிக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் திறைசேரியல்லாத ஏனைய மூலதன மானியமாக அதிகாரசபைக்கு கிடைத்திருந்த ரூபா 717,117,965 தொகை நிதிக்கூற்றுக்களில் ஏனைய மானிய ஒதுக்கங்களாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பான கணக்கு பதிவுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பேரேட்டிற்கமைய ரூபா 1,064,076,577 தொகையான பிற்போடப்பட்ட மானியங்களின் மீதி (Differd Income) வகைப்படுத்தப்பட்டு உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 864,845,549 தொகையான ஒதுக்கங்களின் மீதியின் தன்மை, நோக்கம் போன்ற விபரங்கள் கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) உரிமையிலான மாற்றங்கள் கூற்றில் திறைசேரியின் மூலதன மானியங்களின் பெறுவனவு வேறு வேறாக காண்பிக்கப்பட்டிராததுடன் அது இலாப நட்டக் கணக்கின் மூலம் சீராக்கப்பட்டிருந்தது.

(ஔ) காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது நிதியல்லாத சீராக்கங்கள் செயற்பாட்டு இலாபத்திற்கு சேர்க்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டினுள் ரூபா 9,446,442 தொகையான வாகன விற்பனை இலாபம் அவ்வாறு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டினுள் வாகனங்களை விற்பனை செய்வதன் மூலம் ரூபா 9,446,442 தொகை கிடைத்திருந்த போதிலும் அது ரூபா 7,935,524 ஆக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டினுள் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 9,446,442 தொகை நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பிரதேச அலுவலகங்களால் பேணப்பட்டிருந்த வங்கிக் கணக்கிற்கு உரியதாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காசு மீதி ரூபா 2,720,137 ஆக இருந்த போதிலும், காசுப் புத்தகத்திற்கமைய அந்த மீதி ரூபா 920,137 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மீதியில் ரூபா 1,800,000 ஆன வேறுபாடும், நிதிக்கூற்றுக்களுக்கமைய மேலும், 03 வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 165,657 தொகையான காசு மீதி காசுப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 887,727 ஆனமையால் ரூபா 722,070 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 67,993,683 தொகையான கடன்பட்டோர் மீதியின் 2017 ஒக்டோபர் 22 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய கடன்பட்டோர் மீதி ரூபா 37,700,843 ஆகும். அவற்றுள் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 4,176,388 தொகையான 38 கடன்பட்டோர் மீதிகளும், 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 260,436 தொகையான 02 கடன்பட்டோர் மீதிகளும், 01 முதல் 03 வருடங்களுக்கிடைப்பட்ட ரூபா 33,264,019 தொகையான 20 கடன்பட்டோர் மீதிகளும் காணப்பட்டதுடன், அந்த கடன்களை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1995 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் பல்வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 4,034,856 கூட்டுப் பெறுமதியான 38 முற்பண மீதிகளை 2017 ஒக்டோபர் 22 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவற்றுள் ரூபா 767,476 தொகை அதிகாரசபையின் உள்ளக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 30,963,906 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 300,455 தொகையான 08 கடன்கொடுத்தோர் மீதிகளும், 03 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 1,962,183 தொயையான 02 மீதிகளும், 2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 46,045 தொகையான மீதியும் 2017 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நானாவித கடன்பட்டோர் மீதியினுள் 2017 ஒக்தோபர் 22 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத உள்ளக கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலான மீதி ரூபா 2,629,477 ஆக இருந்ததுடன் கடன் கொடுத்தோர் மீதியினுள் உள்ளக கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலான மீதி ரூபா 3,288,989 ஆகும். இந்த உள்ளக கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலான கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளிடையே 5 வருடங்களை விஞ்சிய தீர்க்கப்படாத ரூபா 755,594 தொகையான 12 மீதிகள் காணப்பட்டன.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான மீள செலுத்தப்பட வேண்டிய வைப்பு மீதி ரூபா 46,454,751 ஆக இருந்ததுடன், அவற்றுள் பயிலுனர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 5,000 படியான வைப்புக்களில் நீண்ட காலமாக மீள செலுத்தப்படாத பெறுமதி ரூபா 27,448,816 ஆகும். அந்த வைப்புக்களை தீர்ப்பதற்கு அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டினுள்ளும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அந்த வைப்புக்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 37,427,985 தொகையான நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,000,000 தொகையான முதலீட்டிற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவு | அதிகாரசபையின் பகுதி நேர பாடநெறிகளின் விரிவுரைக் கட்டணங்களின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய அரசிறை அறவிடப்பட்டு திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(i) நிதிப் பிரமாணம் 104 — மீளாய்வாண்டில் நேர்ந்த 02 வாகன விபத்துக்களுக்கு மற்றும் முன்னைய வருடங்களில் ஏற்பட்ட வாகன விபத்துக்களுக்குரியதாக இடம்பெற்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 396(ஈ) — வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 59,578 கூட்டுத்தொகையான 21 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை

(i) பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி மத்திய நிதியம் எனும் பெயரிலான நிதியமொன்று (Central Fund) தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த நிதியத்தின் மீதி ரூபா 54,812,788 ஆகும். 2013 ஆம் ஆண்டு முதல் இந்த நிதியத்திற்கு பகுதி நேர பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் அச்சீட்டு பிரிவினை இயக்குதலின் இலாபத்திலிருந்து 40 சதவீதம் படியும் வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது

(ii) திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகார சபையினுள் வாசிகசாலை நிதியம், கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் எல்லை மதிலை உடைக்கும் நிதியம், புது மெதுர நிதியம், மோட்டார் சைக்கிள் சுழற்சி நிதியம், பகுதி நேர பாடநெறிகளுக்கான மூலதன ஒதுக்கம் மற்றும் பகுதி நேர பாடநெறிகளுக்கான கடப்பாட்டு நிதியம் எனும் 6 நிதியங்கள் தாபிக்கப்பட்டிருந்தன. மத்திய நிதியத்திற்கு மேலதிகமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த நிதியங்களில் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,632,764 ஆகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 21,878,483 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 84,748,374 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 106,626,857 ஆன அதிகரிப்பொன்று ஏற்பட்டுள்ளது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக திறன்கள் துறை செயற்திட்ட மானியம் ரூபா 47,192,637 இனால்

குறைவடைந்திருந்த போதிலும், திறைசேரி மானியம் ரூபா 83,000,000 இனால் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 33,092,182 இனால் அதிகரித்தமை மற்றும் ஆளணி வேதனங்கள் ரூபா 36,753,773 இனால் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

மீளாய்வாண்டில் மற்றும் கடந்த 4 வருடங்களில் நிதி விளைவுகளைப் மீளாய்வு செய்யும் போது அதிகாரசபையின் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகள் தொடர்ச்சியான பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன், 2015 ஆண்டின் போது ரூபா 84,748,374 ஆன பற்றாக்குறை மீளாய்வாண்டு அளவில் ரூபா 21,878,483 ஆன மிகையொன்று வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழிய ஊதியங்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு ஆகியன சீராக்கப்பட்ட பின்னர் 2012 ஆண்டின் போது ரூபா 376,323,732 தொகையான அதிகாரசபையின் பங்களிப்புத் தொகை மீளாய்வாண்டளவில் ரூபா 654,504,693 தொகை வரை தொடர்ச்சியான அதிகரிப்பொன்றினை காட்டியது.

### 3.2 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணி நீக்கம் செய்யப்பட்ட இரு உத்தியோகத்தர்களால் அதிகாரசபைக்கு எதிராக தொழில் நியாய சபையில் தொடுக்கப்பட்ட 02 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டவாறு காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபைக்குச் சொந்தமான வெல்லவத்த பயிற்சி நிலையத்திற்கு அத்துமீறி நுழைதல் மற்றும் சேதம் விளைவித்தல் தொடர்பில் வெல்லவத்த பொலிஸால் வெளிசாரார் ஒருவருக்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1990 இன் 20 இலக்கம் கொண்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37(1) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு ஆகும்.

(i) தொழிற்பயிற்சிகளைத் திட்டமிடல் மற்றும் வழங்குதல், பயிற்சி தரங்களை நிர்ணயித்தல், பரீட்சைகள் நடத்துதல் மற்றும் சான்றிதழ் பத்திரங்களை வழங்குதல்.

(ii) தொழில் பயிற்சி பற்றிய ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளல், போட்டிகளை நடாத்துதல், பயிற்சி வழங்கும் இயலுமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமமான குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புடைய சான்றிதழ்கள், டிப்ளோமா மற்றும் பட்டம் சித்தியடைவதற்காக கவனம் செலுத்துவதற்காக உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளல் மற்றும் வலுப்படுத்துதல்.

(ஆ) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கடையே தொழில்சார் பயிற்சி தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளல், போட்டிகளை

நடாத்துதல் மற்றும் சமமான நோக்கங்களுடைய இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள நிறுவனங்களுடன் தொடர்புகளுடைய சான்றிதழ் பத்திர டிப்ளோமா மற்றும் பட்டத்தினை சமமாக கருதுவதற்காக உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றல் தொடர்பில் அதிகாரசபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) செயல்நடடிவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளுக்காக திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த பணத்தொகை ரூபா 119.7 மில்லியனாக இருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 65.27 மில்லியன் அல்லது 55 சதவீதமான காணப்பட்டது.

(ஈ) அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளின் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் உள்ளடக்கலான செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் இது தொடர்பில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தினால் மீளாய்வாண்டிற்காகவும் அந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் மற்றும் பாடநெறியை கைவிட்டுச் செல்லல்.**

(i) மாவட்ட ரீதியில் பயிலுனர்களை இணைத்துக்கொள்ளலை கருத்திற் கொள்ளும் போது 2016 ஆம் ஆண்டினுள் அதிகளவான பயிலுனர்களை இணைத்துக்கொள்ளல் முறையே கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் இடம்பெற்றிருந்ததுடன், அந்த அளவு முறையே 3,678 மற்றும் 2,489 ஆக இருந்தது. அதற்கமைய மாவட்ட ரீதியில் இணைத்துக் கொள்ளப்பட்ட 29,694 இற்கு சதவீதமொன்றாக அந்த இரு மாவட்டங்களிலும் இணைத்துக் கொள்ளல் 21 சதவீதமாக இருந்தது. மாவட்ட ரீதியில் ஆகக் குறைந்த இணைத்துக் கொள்ளல் முறையே நுவரெலியா, மொனராகல மற்றும் மன்னார் மாவட்டங்களில் இடம்பெற்றிருந்ததுடன், அந்த அளவு முறையே 596, 617 மற்றும் 657 அல்லது 6 சதவீதமான குறைவான மட்டத்தில் நிலவுகின்றமை பயிற்சி பிரிவின் தகவல்களுக்கமைய அவதானிக்கப்பட்டதுடன், அந்த ஆட்சேர்ப்புக்களை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் அதிகாரசபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கைத்தொழில் அடிப்படையாகக் கொண்ட பயிலுனர் பயிற்சியின் கீழ் கைத்தொழில் கலைஞர்கள் மற்றும் வதிவிட பயிற்சி பாடநெறிகளில் ஆண்டினுள் பாடநெறிகளை கைவிட்டுச் செல்லல் முறையே 40 சதவீதம் மற்றும் 58 சதவீதமும், நிலையத்தினை அடிப்படையாகக் கொண்ட பயிலுனர் பயிற்சியின் கீழ் முழு நேர பாடநெறிகளில் பாடநெறிகளை கைவிட்டுச் செல்லல் 33 சதவீதமான உயர்வான மட்டத்தில் நிலவியது. இந்த பாடநெறிகளை கைவிட்டுச் செல்வதை குறைத்துக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் அதிகாரசபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டில் அம்பாறை மாவட்டத்தில் 02 முழுநேர பாடநெறிகளுக்குரிய 05 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், பயிலுனர் இயளலவு 360 ஆக இருந்தது. எனினும், இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த பயிலுனர்களின்

எண்ணிக்கை 187 ஆக இருந்ததுடன், அவற்றுள் 25 சதவீதம் அல்லது 46 பேர் பாடநெறியை கைவிட்டுச் சென்றிருந்தனர். அதற்கமைய பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்த எண்ணிக்கை பயிலுனர் இயளலவின் 35 சதவீதம் மாத்திரம் என்பதும், குறைப்பயன்பாட்டு இயலளவு 65 சதவீதம் என்பதும் அவதானிக்கப்பட்டது.

(iv) பொத்துவில் பயிலுனர் பயிற்சி நிலையத்தின் தையல் இயந்திர இயக்குனர் பாடநெறிக்கான பயிலுனர் இயலளவு 80 ஆக இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் பயிலுனர்களின் ஆட்சேர்ப்பு 42 ஆக இருந்தது. அதற்கமைய 47 சதவீதமான அளவினை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், பாடநெறிகளை விட்டுச் செல்லும் எண்ணிக்கை 27 அல்லது 64 சதவீதமாக இருந்தது.

(v) சம்மாந்துறை மற்றும் கல்முனை தையல் இயந்திர இயக்குநர் பாடநெறிக்காக நிலவும் இயலளவிற்கு ஒப்பாக பயிலுனர்களை இணைத்துக்கொள்ளும் அளவு 26 சதவீதத்தினை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

### (ஊ) பாடநெறிகளை ஆரம்பிக்காமை

2016 ஆம் ஆண்டிற்கான நிலையத்தினை அடிப்படையாகக் கொண்ட பயிலுனர் பயிற்சியின் கீழ் திட்டமிடப்பட்ட 10 முழு நேர பாடநெறிகள் மற்றும் 03 பகுதி நேர பாடநெறிகளினை நடாத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அந்த பாடநெறிகளுக்குரிய பயிற்சி உபகரணங்களும் விளைவற்றுக் காணப்பட்டது.

### (எ) போதியளவிலான பயிலுநர்களை கொண்டிராத பாடநெறிகளை நடாத்துதல்

ஆகக் குறைந்த பயிலுனர்களின் எண்ணிக்கை 10 ஆக இல்லாத பாடநெறிகளை நடாத்திச் செல்லும் 09 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், போதியளவான பயிலுனர்களின் எண்ணிக்கையுடன் பாடநெறிகளை நடாத்திச் செல்லல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஏ) தேசிய நிறுவனங்களின் செயன்முன்னேற்றம்

தேசிய பயிலுனர் மற்றும் வாழ்க்கை சார் பயிற்சி அதிகாரசபையினுள் தேசிய மட்டத்திலான 04 நிறுவனங்கள் 2016 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் தேசிய நிறுவனங்களுக்காக இணைத்துக் கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த பயிலுனர்களின் எண்ணிக்கை 1,535 ஆக இருந்ததுடன், இணைத்துக் கொள்ளல் 1,373 ஆக இருந்தது. பாடநெறிகளை கைவிட்டுச் செல்லும் எண்ணிக்கை 139 ஆக இருந்ததுடன், ஆட்சேர்ப்புக்களின் சதவீதமாக அந்த அளவு 10 சதவீதமாகும். தலைவரின் பதிலுக்கமைய குழாய் பொருந்துனர்கள், தச்சர் மற்றும் இயந்திரக்கூடம் போன்ற துறைகளின் பயிற்சி பெறும் கலைஞர்களுக்கான அதிக கேள்வி நிலவிய போதிலும், மாணவர்களின் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவானமையால் ஆட்சேர்ப்புக்கள் குறைவடைந்திருந்தன.

### (ஐ) நிர்மாண மற்றும் புனரமைத்தல் பணிகள்

(i) அதிகாரசபையின் ஹெவ்லொக் டவுன் கட்டிடத்தில் கூட்டங்களை நடாத்துவதற்காக பூரணமான ஒன்றுகூடல் மண்டபமொன்றினை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய பணி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது 05 பயிற்சி நிலையங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 36.34 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் பதுளை பயிற்சி நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன், கண்டி பயிற்சி நிலையத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட நிர்மாணப் பணியின் பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 20.41 மில்லியன் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) அதிகாரசபையின் கீழ் காணப்படும் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் 8 பாடநெறிகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது பயிலுனர்களை இணைத்துக் கொள்ளும் போது அதன் செயற்பாட்டு நடைமுறைக்கு மற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நடைமுறைகளுக்கு முரணாக விண்ணப்பம் கோரும் காலத்தினை நீடிப்பு செய்தல், ஆகக் குறைந்த தகைமையினை பெறாதவர்களை எழுத்துமூல பரிசோதனைக்கு வரவழைத்தல் மற்றும் வினாப்பத்திரங்களின் புள்ளிகளை மாற்றுதல் போன்ற மோசடிகள் இடம்பெற்றிருந்தன.

(ii) இரண்டாவது முறையாக நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகளின் ஒழுங்குமுறைக்கு புறம்பாக குறைவான புள்ளிகளை பெற்றிருந்த 29 விண்ணப்பதாரிகள் முறையற்ற விதத்தில் அழைப்பு விடுக்கப்பட்டு இணைத்துக்கொள்ளப்பட்டு, அவர்களில் 26 பேருக்கு உயர்வான புள்ளிகளின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படும் பாடநெறிகளை தொடர்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) தேசிய நிறுவனங்களின் செயற்பாட்டு நடைமுறைக்கமைய நேர்முகப் பரீட்சைக்காக வெளிவாரி உத்தியோகத்தர் ஒருவர் பங்குபற்ற வேண்டியதுடன், எதுவித வெளிவாரி உத்தியோகத்தரும் பங்குபற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், சான்றிதழ் பத்திர பரிசோதனைக்காக நேர்முகப் பரீட்சைக்கு பங்குபற்றியிருந்த நிர்வாக உத்தியோகத்தர் உரிய பதிவேடுகளில் கையொப்பமிடப்பட்டிராததுடன், பங்குபற்றாத ஒருவரும் அதில் கையொப்பமிட்டிருந்தார்.

(ஆ) கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறியியல் பாடநெறிகளின் விடயப்பரப்பிற்கு தேவையான கால ரீதியான திருத்தங்களை மேற்கொள்வதற்காக அதிகாரசபையினால் தனியார் கம்பனியொன்றுடன் 2014 மே மாதத்தின் போது ரூபா 3,231,500 பெறுமதியான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட பணி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், அதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,809,640 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2017 யூன் 18 ஆந் திகதியளவில் 03 வருட காலம் கடந்திருந்த போதிலும், குறித்த பணி மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டிருந்தது. முற்பணங்களை செலுத்துவற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 723,856 தொகையான வங்கிப் பிணை 2014 யூலை 31 ஆந் திகதி நிறைவடைந்திருந்ததுடன், செலுத்தப்பட்ட முற்பணத் தொகைகளையும் அறவிடுவதற்கான சந்தர்ப்பங்களும் இழக்கப்பட்டு, வழங்கப்பட்ட மொத்த முற்பணத் தொகையும் அதிகாரசபைக்கு நட்டமாக மாறியிருந்தது.

**4.3 தொழிற்படு செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்சார் திறன்கள் சான்றிதழின்றி தற்போது தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு முன் அறிவினை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைமை

(RPL) இன் கீழ் நிபுணத்துவ மட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டிற்கான தேசிய நிபுணத்துவ சான்றிதழ் பத்திரம் (NVQ) இனை வழங்குவதற்காக விண்ணப்பங்களை கோருவதற்கு திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதிகளின் மூலம் 2016 திசெம்பர் 25 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 4,942,700 தொகை செலுத்தப்பட்டு பத்திரிகை அறிவித்தலொன்று 10 பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் இல்லாத அந்த பணிக்கான அந்த விளம்பரச் செலவினத்தை மேற்கொள்வதற்கான முறையான அங்கீகாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் மற்றும் மாவட்ட நிலையங்களினுள் 71 உபகரணங்கள் மற்றும் பொருட்பதிவேட்டு இருப்புக்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், தலைமை அலுவலகத்தின் தொழிற் பயிற்சி பிரிவில் பௌதீக ரீதியாக காணப்பட்ட 62 பொருட்பதிவேட்டு இருப்பு உருப்படிகள் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 வெளிப்படையான மோசடிகள்

இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் அரசுடமையாக்கப்பட்ட ஓட்டத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாத டொயோட்டா கொரோனா வகையான வாகனம் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,134,000 தொகையான பெறுமதிக்கு அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அந்த வாகனம் அதிகாரசபையினால் பதிவு செய்யப்பட்டிராததுடன், பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவின் அறிவுரையின் அடிப்படையில் 2016 நவம்பர் 29 ஆந் திகதி அதன் என்ஜின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி ஜேர்மன் பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வண்டியின் ஓட்ட நிலைமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் அறிக்கைகளின் பிரகாரம் உரிய பரிசோதனையொன்றை மேற்கொள்ளாது கொள்வனவை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு மற்றும் கொள்வனின் பின்னர் பழுதுபார்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 நிதியங்களின் குறைப்பயன்பாடு

2016 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக பயன்படுத்தப்படாத மூலதன மானியம் ரூபா 33,389,693 ஆக இருந்ததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த அளவு ரூபா 23,955,451 ஆனமையால் திறைசேரியிலிருந்து கிடைக்கும் மூலதன மானியம் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது கல்முனை பிரதேச செயலாளரினால் மாவட்ட பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த 01 ஏக்கர் பரப்பளவான காணி 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பயிற்சி நிலையத்தினுள் மற்றும் பதுளை மாவட்டத்தின் பதுளை பயிற்சி நிலையத்தினுள்ளும் சிகிச்சை சேவைகள் உதவியாளர் பாடநெறிக்குரிய பயிற்சி உபகரணங்களின் 56 உருப்படிகள் அந்த பாடநெறிகள் நடாத்தப்படாமையால் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டின் போது எதுவித பயிற்சியும்

நடாத்தப்பட்டிராமையால் அதன் 751 பயிற்சி உபகரண உருப்படிகள் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தி மற்றும் 9.4 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணாக அதிகாரசபையின் வளங்கள் வெளிவாரி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் இரு ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கும் நான்கு பேர் அமைச்சரவைக்கும் 2015 திசெம்பர் 09 ஆந் திகதி முதல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், விடுவிக்கப்பட்ட காலம் 05 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரையான காலப்பகுதியாகும். ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த இந்த உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் அந்த இணைப்புச் செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 824,087 ஆன சம்பளங்களை மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் குழாம் வாகனமொன்று எவ்விதமான எழுத்துமூல அங்கீகாரமொன்று அல்லது விடுவித்தலோ இன்றி 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி முதல் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் அமைச்சுப் பதவியணியின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வாகனத்தின் சேவை மற்றும் பழுதுபார்த்தல்களுக்காக ஆண்டினுள் அதிகாரசபையினால் ரூபா 160,641 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.8 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,358 ஆக இருந்ததுடன், ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் 46 பேர் உள்ளடங்கலாக உள்ளபடியான பதவியணி 1,121 ஆகும். அதற்கமைய நிரந்தர வெற்றிடங்களின் எண்ணிக்கை 283 ஆக இருந்ததுடன், அந்த பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விரிவுரையாளர், பயிற்சி உத்தியோகத்தர் மதியுரையாளர் மற்றும் பரிசோதகர் போன்ற பணிப்பாளர் தொகுதியின் 198 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், அது நிறுவனத்தின் பயிற்சி மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்பில் பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்துமென அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபைக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காது 2011 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு பிரிவின் மற்றும் 2009 ஆம் ஆண்டு முதல் பராமரிப்பு பணிகளில் கடமைகளுக்காக கையளிப்பு அடிப்படையில் இரு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

(இ) அதிகாரசபையினால் 2009 நவம்பர் 10 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைக் கடிதத்திற்கு முரணாக பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்கு 2012 யூலை 16 ஆந் திகதி இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தரின் ஆரம்ப சம்பள படிமுறையாக ரூபா 25,640 தொகை நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்த்தலுக்குரிய பத்திரிகை அறிவித்தலுக்கமைய பதவிக்குரிய அடிப்படை சம்பளம் ரூபா 38,530

ஆனமையால், அந்த சம்பளத்தை செலுத்துமாறு உத்தியோகத்தர் நிறுவனத்திடம் கோரியிருந்தார். எவ்வாறெனினும், சம்பளத்தை சீராக்காது அந்த கோரிக்கை தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அதன் போது இரு தரப்பினர் உடன்பட்ட சம்பள படிமுறை மற்றும் நிலுவைச் சம்பளம், பதவியை பொறுப்பேற்ற திகதி முதல் திருத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் விளைவொன்றாக உரிய உத்தியோகத்தருக்கு ரூபா 436,805 கூட்டுத்தொகையான நிலுவைச் சம்பளங்களை செலுத்த நேர்ந்திருந்தது. இது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்படி “இ” இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரின் சேவையை நிரந்தரமாக்குவதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு அதிகாரசபையின் உப தலைவரால் 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதி அந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவை தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் போது அந்த சேவையில் காணப்பட்ட செயலாற்றல் அறிக்கை அகற்றப்பட்டு மற்றுமொரு செயலாற்றல் அறிக்கையொன்று இணைக்கப்பட்டிருந்ததாக உதவிப் பணிப்பாளர் மனிதவனத்தின் 2015 செப்டெம்பர் 23 ஆந் திகதிய குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் தொடர்பில் முறையான பரிசோதனையொன்றினை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தாபனவிதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவிற்கமைய தமது நியமத்தின் நிபந்தனைகளுக்கமைய சேவையில் நிரந்தரமாக்குவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய எந்தவொரு தகைமையினையும் பெற்றுக்கொள்வதற்காக தவிர, நன்நடத்தைக் காலத்திலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் கல்வி அல்லது பயிற்சிகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படாத போதிலும், அதிகாரசபையினால், அதற்கு முரணாக 18 உத்தியோகத்தர்கள் 2 வெளிநாட்டு பயிற்சி கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஊ) 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி அலுவலக உதவியாளர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அதிகாரசபையின் தலைவரால் அவரின் பதவிக்குரிய கடமையில் முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டு, அதிகாரசபையின் நோக்கங்களுக்கு முரணாக விசேட பணிக் கையளிப்பொன்றாக களுத்துறை மாவட்டத்தினுள் க.பொ.த (சாதாரண தர) வரை கல்வி கற்றுள்ள மாணவ மாணவிகளின் தகவல்களை சேகரிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2016 ஆகஸ்ட் 01 முதல் 2017 மே 30 வரை ரூபா 348,973 கூட்டுத்தொகையான தேறிய சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(எ) அதிகாரசபைக்குரிய திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 04 கைத்தொழில் திறன்கள் கவுன்சில்களை (Sector Council) நிறுவுவதற்காக உரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக இணைப்பாளர் பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு, அந்த பதவிக்காக 2016 மே 02 ஆந் திகதி நபரொருவர் இணைத்துக்கொள்ளப்பட்டு, செயற்திட்டத்தின் நிதியத்தினால் சம்பளம், வாகனம் மற்றும் எரிபொருள் படிகளாக 2016 ஆம் ஆண்டினுள் ரூபா 585,569 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. திறன்கள் கவுன்சில்களுக்கு உரியதாக நடாத்தப்படும் கலந்துரையாடல்களை இணைப்பு செய்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் இந்த உத்தியோகத்தரின் பணியாகும். 2016 திசெம்பர் மாதத்தின் போது 10 நாட்களும், 2017 சனவரி முதல் ஏப்ரல் வரை 26 நாட்களுமாக 36 நாட்கள் மாத்திரம் இந்த உத்தியோகத்தர் சேவையாற்றியிருந்ததுடன், அதற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 420,200 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய வேலை நாள் ஒன்றுக்கு ரூபா 11,672 தொகையான அசாதாரணமான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.9 வாகனப் பயன்பாடு

2007 முதல் 2014 ஆம் ஆண்டு வரை என்ஜின் திருத்த வேலைக்காக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட ஒருகொடவத்த வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்த வாகனமொன்றிற்குரிய பழைய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால், வழுக்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்திருந்த விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. இந்த வாகன பழுதுபார்த்தல்களுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் 04 தடவைகள் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும், பழுதுபார்த்தல் இடம்பெற்றிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் போது அது பழுதுபார்த்தலுக்காக முன்வைக்கப்பட்ட மதிப்பீடு ரூபா 918,428 ஆக இருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அதன் மதிப்பீடு ரூபா 1,683,500 வரை அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது பழுதுபார்க்கப்பட்ட இந்த வாகனம் 2016 மார்ச் 15 ஆந் திகதி தீப்பற்றியிருந்ததுடன், 2016 யூலை 21 ஆந் திகதி காப்புறுதி கம்பனியினால் ரூபா 110,040 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 நவம்பர் 23 ஆந் திகதி வரையிலும், அது மீண்டும் பழுதுபார்க்கப்படாது தனியார் கராஜ் ஒன்றில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையினால் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று அமைக்கப்பட்டு 08 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க கணக்காய்வுகள் நடாத்துதல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களை சரிசெய்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 10 சதவீதம் முதல் 118 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.3 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சிலிருந்து 2014 ஆண்டின் போது உலக இளைஞர் மாநாட்டிற்காக அதிகாரசபையினால் செலவிடப்பட்ட ரூபா 2,000,000 தொகை பெறவேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது கட்டுபெத்த பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் மாணவர் விடுதியில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கியின் செப்புக் கம்பனியின் சுமார் 25 அடிகள் வரையான அளவு காணாமற் போனமை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) களஞ்சியக் கட்டுப்பாடு | கொள்வனவு செய்யப்பட்ட சில இருப்பு விடயங்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்படாமை. |
| (ஆ) கணக்கீடு | (i) பேரேட்டுக் குறிப்புக்களை இடும் போது குறிப்பான எல்லைகளை ஒப்படைத்து உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிராமை. |
| | (ii) 05 நடைமுறைக் கணக்குகளுக்காக வேறுவேறாக வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை. |
| | (iii) அதிகாரசபையின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் முறையற்ற விதத்தில் மற்றும் பூரணமின்றியும் கோவைப்படுத்தப்படல் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரினால் பரிசீலிக்கப்படாது கணக்காய்விற்கு முன்வைக்கப்படுகின்றமை. |
| | (iv) ஒரு வங்கிக் கணக்கிற்காக 3 காசுப் புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டமையால், அந்த பணிகள் சிக்கலானதாகவும் தெளிவற்றும் காணப்படுகின்றமை. |
| (இ) வாகனப் பாவனை | தேவையான சந்தர்ப்பங்களில் வாகனங்களைப் பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தாமையால் வாகனங்கள் சிதைவுற்ற நிலையினை அடைதல். |
| (ஈ) பதவியணியினர் நிருவாகம் | (i) கல்விசார் பதவியணியினர் போதியளவில் இணைத்துக்கொள்ளப்படாமையால் பயிற்சி வழங்குவதில் தடைகள் ஏற்படுகின்றமை. |
| | (ii) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு புறம்பான முறைகளினூடாக பதவியணியினர் ஆட்சேர்க்கப்படுகின்றமை. |
| | (iii) இரகசிய தன்மை மற்றும் பாதுகாப்பு வழங்கும் வகையில் தனிப்பட்ட கோவைகள் பேணப்படல், ஒழுக்காற்று நடவடிக்கை நடத்துதல் மற்றும் அதனது தீர்மானங்கள் செயற்படுத்தாமை. |
| (உ) நிதி முகாமைத்துவம் | முறைமையான அங்கீகாரம் ஒன்று இன்றி நிதியங்களை நடாத்துவதற்கு இடமளித்ததன் காரணமாக பணம் விளைவற்றுக் காணப்படுகின்றமை. |